இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 04-08-2025

# நலம் காக்கும் நல் முதலமைச்சர்

தமிழ்நாட்டின் அனைத்து மக்களின் நலம் காக்கும் நல் முதலமைச்சராக செயல்பட்டு வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**அனைத்துத் துறைகளும் தங்களது துறையின் சார்பில் பல்வேறு மகத்தான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. இவை அனைத்தும் சேர்ந்து தமிழ்நாட்டை உன்னதமான இடத்துக்கு உயர்த்தி வருகிறது. அதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பங்கு மிகமிக முக்கியமானது ஆகும்.**

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தி, அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி கிடைப்பதை உறுதி செய்தது இந்தத் துறையின் மகத்தான சாதனை ஆகும். மக்களைத் தேடி மருத்துவம் - இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 - பாதம் பாதுகாப்போம் - இதயம் காப்போம் - சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம் - மக்களைத் தேடி ஆய்வக சேவைகள் - நடப்போம் நலம் பெறுவோம் திட்டம், வணிகர்களைத் தேடி மருத்துவத் திட்டம் - தொழிலாளர்களைத் தேடி மருத்துவம் - முதல்வர் மருந்தகம் என்ற வரிசையில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்ற மருத்துவ முகாம்களை இத்துறை தொடங்கி இருக்கிறது. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் நேற்றைய தினம் (02.08.2025) தொடங்கி வைத்துள்ளார்கள்.

38 மாவட்டங்களில் 1,256 முகாம்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் நடைபெறுகிறது. சமூகப் பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களது நன்மைக்காக இவை அமைக்கப்பட்டுள்ளன. E.C.G, எக்கோ, X-Ray, ஸ்கேன், காசநோய் மற்றும் தொழுநோய் பரிசோதனைகள், பெண்களுக்கான கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பகப்புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் செய்யப்பட இருக்கிறது. இது தொடர்பான மருத்துவ அறிக்கை, அனைவருக்கும் தரப்பட இருக்கிறது. ஆகஸ்ட் 2 ஆம் தேதி மட்டும் தமிழ்நாடு முழுவதும் சுமார் 50 ஆயிரம் பேர் இந்த முகாமுக்கு வந்து பயனடைந்திருக்கிறார்கள்.

**இந்த முகாமில் பயனடைந்த மக்கள் ஊடகங்களில் அளித்து வரும் பேட்டிகள், இதன் பயன்பாட்டை உறுதி செய்துள்ளது.**

பெண்கள், ஏழை எளியோர், மாற்றுத்திறனாளிகள், வயதானவர்கள் என அனைவரும் மகிழ்ச்சி மனநிலையோடு பேட்டிகள் கொடுத்து வருகிறார்கள். "வரும் போது அனாதை போல வந்தேன். இப்ப திருப்தியோடு போறேன். பொதுவா ஒரு இடத்துக்கு போனா, 'அந்தப் பக்கமா போங்க' என்று சொல்லி விடுவார்கள். ஆனா இங்க வந்ததும் ஒவ்வொரு இடத்துக்கா கூட்டிட்டு போனாங்க. கண் பரிசோதனை செய்தேன். முதலமைச்சரையும் பார்த்தேன். கை கொடுத்து பேசிட்டு இருந்தாரு. இதெல்லாம் எனக்கு கிடைச்சிருக்கு... சந்தோஷமா வீட்டுக்கு போறேன்" என்கிறார் மயிலாப்பூரைச் சேர்ந்த கவுசியம்.

★ சென்னை கிண்டியைச் சேர்ந்த திருவேங்கடம் என்பவர், "மெரினா கடற்கரை மணல் பரப்பு சிறுகடை வியாபாரிகள் சங்க உறுப்பினராக நான் இருக்கிறேன். இந்த முகாம் சிறப்பாக உள்ளது. அனைத்துப் பரிசோதனைகளையும் சிறப்பாக செய்தார்கள். கண், பல், ரத்தப் பரிசோதனை செய்தனர். அனைத்து சோதனையும் ஒரே இடத்தில் செய்தனர். அனைத்து மருத்துவர்களும் ஒரே இடத்தில் இருந்தனர். இந்த முகாம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது" என்று சொல்லி இருக்கிறார்.

★ கொளத்தூரைச் சேர்ந்த கணேஷ் பாபு, "திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாக உள்ளது, ஒரு மணி நேரத்தில் அனைத்து சோதனைகளும் முடிந்துவிட்டது, வெளியே சென்று இந்தச் சோதனைகளை செய்தால் பல ஆயிரம் ரூபாய் செலவாகும். ஆனால் இலவசமாக இன்று பரிசோதனை செய்தோம்" என்று சொல்லி இருக்கிறார்.

★ சாந்தோமைச் சேர்ந்த ராதா என்பவர், "எங்களைப் போன்ற நடுத்தர மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது" என்றார்.

★ மயிலாப்பூரைச் சேர்ந்த சொர்ணாம்பிகா, "நான் கர்ப்பமாக உள்ளேன். ரத்தப் பரிசோதனை செய்தேன். செலவில்லாமல் மிக விரைவாக பரிசோதனை செய்து கொண்டேன்" என்கிறார்.

★ மயிலாப்பூரைச் சேர்ந்த பவுசியா பேபி, " பத்து பைசா செலவு இல்லாமல் எனக்கு பரிசோதனை செய்தனர். ரத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை எடுத்தனர். அனைத்தும் நன்றாக உள்ளது, இந்தத் திட்டம் செயல்படுத்தியது எங்களைப் போன்றவர்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பாக உள்ளது. என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல ஆளில்லை. ஆனால் இங்கு சிறப்பாக கவனித்தார்கள்" என்று சொல்கிறார்.


★ "எனக்கு இன்று செய்த பரிசோதனைகளை வெளியே சென்று செய்தால் 4000 ஆயிரம் ரூபாய் ஆகும். ஆனால் இங்கு அனைத்தும் இலவசம்" என்கிறார் ஐஸ் ஹவுஸ் பகுதியைச் சேர்ந்த யாஸ்மின்.

இவைதான் முதலமைச்சருக்கு கிடைத்துள்ள நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகும்.

**"என்னைப் பொறுத்தவரைக்கும், ஒரு திட்டத்தை கொண்டுவருகிறோம் என்றால், அது ஒவ்வொரு தனிமனிதரையும் சென்றடைய வேண்டும். ஒரே ஒருவர் கூட விடுபட்டுவிடக் கூடாது. அதில் நான் மிகவும் கவனமாக இருக்கிறேன். அதனால்தான் உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற திட்டங்கள் மூலமாக, ஒவ்வொருவரின் தேவையையும் புரிந்து கொண்டு அவர்களுடைய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம்" என்று மாண்புமிகு முதல்வர் சொன்னதையும் - மக்கள் அளித்து வரும் பேட்டிகளையும் ஒப்பிட்டுப்பார்த்தால் மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அதை நடைமுறைப்படுத்தும் முதலமைச்சராக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருவதை உணரலாம்.**

உயர்தரமான மருத்துவச் சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது. அனைவரையும் நலமுடன் வாழ வைப்பதிலும் தமிழ்நாடு முன் மாதிரி மாநிலமாக முன்னேறி வருவதை உறுதி செய்துள்ளார் நல் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

●●



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும். நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள், தியாகி தீரன் சின்னமலையின் நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள அலுவலகத்தில் இருக்கும் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். அருகில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி. மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் விஜயா ஜெயராஜ், பொருளாளர் துரைராஜ், குடமுருட்டி சேகர், தொ.மு.ச. அமைப்பாளர் குணசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் மூவேந்தரன், கலைச்செல்வி, கவிதா புஷ்பராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து

# ஒவ்வொரு கட்சிகளாக வெளியேறுகின்றன!

## அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

திருச்சி, ஆக. 4-

திமுக கூட்டணியிலிருந்து சில கட்சிகள் வெளியேறும் என எதிர்கட்சிகள் கூறி வந்தன. ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து தான் ஒவ்வொருவராக வெளியேறி வருகிறார்கள். எங்கள் கூட்டணியிலிருந்து எந்த கட்சியும் விலகாது என திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டியளித்தார்.

தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக நலம் காக்கும் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் துவங்கி வைத்தார்.



தொடர்ந்து திருச்சி தில்லை நகர் கி.ஆ.பெ விஸ்வநாதன் பள்ளியில் நடைபெறும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார்

தொடர்ந்து மருத்துவ முகாம்களை பார்வையிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் உள்ளிட்ட பல்வேறு பயனாகிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த முகாமில் தொழில்நுட்ப மேம்பாட்டுடன் கூடிய நோய் கண்டறியும் வசதிகள் உள்ளது மேலும் பல்வேறு பரிசோதனை கூடம் அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் செய்தியாளர் களிடம் பேசிய நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே என் நேரு,

இந்த முகாமை மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

அதிமுக ஆட்சியில் ஒவ்வொரு திட்டத்திற்கும் "அம்மா" என பெயர் வைத்தார்கள். தற்போது நாங்கள் வைக்கும் திட்டத்திற்கு முதல்வர் பெயரை பயன்படுத்தக்கூடாது என வழக்கு தொடுத்து உள்ளார்கள். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் போது இது குறித்து நான் பேச விரும்பவில்லை.

திமுக கூட்டணியிலிருந்து சில கட்சிகள் வெளியேறும் என எதிர்கட்சிகள் கூறி வந்தன. ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து தான் ஒவ்வொருவராக வெளியேறி வருகிறார்கள். தற்போது ஓ.பி.எஸ் ம் வெளியேறி உள்ளார். எங்கள் கூட்டணியிலிருந்து கட்சிகள் வெளியேற வேண்டும் என ஆசைப்பட்டார்கள்

ஆனால் எங்கள் கூட்டணியிலிருந்து எந்த கட்சியும் விலகாது.

பல்வேறு விவகாரங்களில் இருந்து தப்பிப்பதற்காக தான் எடப்பாடி பழனிச்சாமி பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளார்.

கிட்னி திருட்டு விவகாரத்தில் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட ஆட்சியர் சரவணன், மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, கதிரவன், சௌந்தர பாண்டியன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்–காஞ்சிபுரத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள் - அமைதிப் பேரணி!

## மாவட்டம் முழுவதும் திருவுருவச் சிலை-திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்திடுவீர்!

## கழகத்தினருக்கு – மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக.4,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் வருகிற 7 ஆம் தேதி ஆகும். அவரது நினைவு தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் அமைதிப் பேரணியில் பங்கேற்பதுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதுடன், ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் நல உதவிகள் வழங்கிட வேண்டுமாய் மாவட்டக் கழகத்திருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ் நாட்டின் மக்களுக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் தன்னை அர்ப்பணித்து, மக்களின் தேவை அறிந்து திட்டங்களைத் தீட்டி அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டிற்கு, ஏன் இந்தியாவிற்கே முன்னோடி; முதன்மையானத் திட்டங்களைத் தீட்டி முன்மாதிரியாக ஒரு அரசு எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு தான் முதலமைச்சராக இருந்து திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

**மேம்பாலங்கள் கலைஞர் பெயரை நினைவு படுத்தும்!**

கண்ணொளி வழங்கும் திட்டம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், இரவலர் மறுவாழ்வு திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம், விவசாயிகளுக்கு 7000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி, அரசு ஊழியர்களுக்கு பொங்கல் போனஸ், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டம், மகளிர்க்கு திருமண நிதி உதவித் தொகை திட்டம், கருவுற்றப் பெண்களுக்கு நிதி உதவி, பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, உள்ளாட்சிகளில், அரசு அலுவலகங்களில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, ஒன்று முதல் 5 ஆம் வகுப்பு வரையில் ஆசிரியர்களாக பெண்கள் நியமனம், கல்லூரி வரை பெண்களுக்கு இலவச கல்வி, பெண்கள் தன் காலிலே சுயமாக நின்றிட மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்று நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

அதுமட்டுமா? மேம்பாலங்கள் என்றால் அண்ணா மேம்பாலம் தொடங்கி, கத்திப்பாரா பாடி மேம்பாலங்கள் என்று ஆயிரக்கணக்கான மேம்பாலங்கள் இன்றும் கலைஞர் அவர்களின் பெயரை முன்மொழிந்துக் கொண்டிருக்கின்றன.

தொழில் வளர்ச்சியைப் பெருக்க சிப்காட் தொழிற்சாலைகள், கார் உற்பத்தி தொழிற்சாலைகள், கண்ணாடி உற்பத்தி தொற்சாலைகள், செல் கம்பனி தொழிற்சாலைகள் என்று தமிழகத்தில் காணும் தொழிற்சாலைகள் எல்லாம் இன்றும் கலைஞர் அவர்களின் பெயரைத்தான் முன்மொழிந்துக் கொண்டிருக்கின்றன.

**அய்யன் வள்ளுவருக்கு பெருமை சேர்த்தார்!**

தமிழ்க்கு செம்மொழி அங்கிகாரம், அய்யன் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டம், குமரியில் 133 அடி கொண்ட வானுயர அய்யன் திருவள்ளுவர் சிலை, பூம்புகார் கலைக் கூடம் என்று அடுக்கிக் நாம் கொண்டே போகலம்.

இந்தியாவிற்கு தமிழ் நாட்டிற்கு, தமிழ் மொழிக்கு, தமிழ் மக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பெருந்தலைவர்களியின் பெருமையை நிலை நாட்டும் வகையிலும் திட்டங்களைத் திட்டி செயல்படுத்தினார் கலைஞர்., டாக்டர் அம்பேத்கர் பெயரில் முதல் சட்டப் பல்கலைக் கழகம், தந்தை பெரியார் அவர்களுக்கு தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று கலைஞர்அவர்களின் திட்டங்கள், செயல்கள் ஒவ்வொன்றும் தமிழ்நாட்டிற்காகவே அமைந்திருந்தன.



**திராவிட இயக்க பெருந்தலைவர் கலைஞர்!**

இப்படி தன் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டுக்காக, தமிழ் மொழிக்காக, தமிழ் மக்களுக் காகவே தனது 14 வயதில் மக்கள் பணி தொடங்கி 95 வயது வரையில் தன் உயிர் மூச்சு வரை வாழ்ந்திட்ட பெருமகன், திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அப்படிப்பட்ட திராவிட இயக்கப் பெருந்தலைவர் கலைஞர் அவர்கள் 7.8.2018 ஆம் ஆண்டு நம்மை விட்டுப் பிரிந்துச் சென்றாலும், இன்றும் நம் ஊனோடும், உணர்வோடும் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்.

**காஞ்சிபுரத்தில் அமைதி ஊர்வலம்!**

நம் உணர்வோடு கலந்த கலைஞர்அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் வருகிற (7.8.2025) வியாழக் கிழமை ஆகும். அவரது நினைவு தினத்தை முன்னிட்டு 7.8.2025 அன்று காலை 7 மணியளவில் என் (க.சுந்தர் எம்.எல்.ஏ.) தலைமையில் காஞ்சிபுரம் காந்தி சாலையில் உள்ள பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களிறன் நினைவு தூணில் இருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டு, மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள ( கலைஞர் பவளவிழா மாளிகை) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட விருக்கிறது.

அதேபோன்று நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வார்டுகள், கிளைக்கழக அலுவலகங்களிலும் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கும் அவரது திருவுருவப் படங்களுக்கும் 7.8.2025 அன்று காலை, மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதுடன், ஏழை மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றிய கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஆங்காங்கே ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் நல உதவிகள் வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் வழியில் கலைஞருக்கு பெருமை சேர்ப்போம்!**

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் திராவிட மாடல் அரசின் நாயகர், கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழியில், அவருக்கு உறுதுணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் நமது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ்க்கு மேலும் பெருமை சேர்த்திடும் வகையில் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கழகத்தினர் தங்களது இல்லங்களிலும் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



முடிச்சூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் பா.தாமோதரன் சமீபத்தில் கழகத்தில் இணைந்தார். நேற்றைய தினம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசனை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் சுஜாதா மேகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.